04.03.2025 S.C.No.138 of 2017 P.W.51 – Govindhasamy

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர் முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

(A1 to A6 present)

**முதல் விசாரணை தொடர்ச்சி தொடங்கிய நேரம் 04.10 P.M.**

நேற்றைய தினம் அ.த.சா.ஆ.81 படிவம் 91ல் சொல்லப்பட்டுள்ள இரண்டு வழக்கு சொத்துக்களான போர்வை மற்றும் டிரவுசர் இந்த நீதிமன்ற விசாரணைக்கு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலிருந்து வராமல் இருந்ததால் முதல் விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. அதன் பின்னர் இந்த நீதிமன்றம் உரிய கடிதம் மூலம் நீதித்துறை நடுவர் எண்.3 க்கு உரிய வழக்கு சொத்தை வரவழைக்க உத்தரவிடப்பட்டது.

அதன்படி 04.04.2025ம் தேதியிட்ட கடிதத்தின் மூலம் மேற்படி வழக்கு சொத்துக்கள் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 5, வேலூர்–ல் இருந்து 14.07.2015 அன்று படிவம் 91 மூலம் சி.பி.எண்.99/2015 குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3, வேலூர் வழக்கு சொத்தை பெற்றிருந்த நிலையில் அதை தொடர்ந்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3ல் அந்த வழக்கு சொத்துக்கான எண் குறப்பிடப்படவில்லை என்றும் மேலும் அந்த வழக்கு சொத்து தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை என்றும் அறிக்கை வந்தது. அதன் அடிப்படையில் அந்த வழக்கு சொத்தை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.5ல் இருந்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3 க்கு சென்றது உறுதிப்படுத்தப்படுகிறது. எனவே அந்த சொத்து குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.3ல் இருந்து இந்த நீதிமன்றத்திற்கு வராததால் தகுந்த நடவடிக்கை இந்த நீதிமன்றம் எடுத்துக்கொள்ளலாம்.

**1ம் எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

கே: 27.06.2015 அன்று 00.15 மணிக்குத்தான் பள்ளிக்கொண்டா காவல் நிலையம் சென்று பொறுப்பேற்றேன் என்றால்?

ப: 26.06.2015 அன்று இரவு 10.00 மணிக்கு ஆம்பூர் காவல் துணைக்காண்காணிப்பாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின்படி பொறுப்பேற்றேன்.

கே: மேற்சொன்ன 26.06.2015 அன்று இரவு 10.00 மணிக்கு ஆம்பூர் காவல் துணைக்காண்காணிப்பாளர் அவர்களின் வாய்மொழி உத்தரவின்படி பொறுப்பேற்றேன் என்பதை நான் என்னுடைய கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால்?

ப: சொல்லவில்லை. ஆனால் கூடுதல் பொறுப்பு என்று குறிப்பிட்டுள்ளேன்.

கே: கு.வி.மு.ச.பிரிவு 161 வாக்குமூலத்தில் 26.06.2015 அன்றுதான் கூடுதல் பொறுப்பை பள்ளிக்கொண்டா காவல் நிலையத்தில் ஏற்றுக்கொண்டதாக சொல்லியுள்ளீர்கள். அதை மறைத்து தற்போது பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால்?

ப: சரியல்ல.

கே: உயர் அதிகாரிகள் வாய் மொழி உத்தரவு கொடுத்தாரகள் என்று நான் சொல்வது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால்?

ப: சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிவுற்ற நேரம் மாலை 04.30 மணி**

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.04.04 17:35:04 +0530